பழைமைக்குப் பல்லாண்டு பாடும் பட்டாபியார்!

Phone No. 4502

[விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிட தமிழ்த் தினசரி கருத்திதழ்)

மணி 1 | சென்னை (15—12—49) | வெளியீடு (16—12—49) | இதழ் 117

உதவாக்கரை பேச்சிலாழும் 'இமிடேஷன்' தேசபக்தர்கள்!

—(0)—

தேர்தலைச் சுட்டிக்காட்டி மசோதாவை மடக்கும் 'மட்டரகங்கள்'!

இரண்டுங் கெட்ட நிலையில் நேரு சர்க்கார்!

சமுதாய சீர்திருத்தம் செய்யவேண்டாமென நான் சொல்லவில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடாத சட்டம் (இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா) ஒன்றை இன்று நாம் கொண்டு வருகிறோம். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏதேதோ சொன்னோம். ஆனால் சமுதாயச் சீர்திருத்தம் பற்றி எதுவும் தெரிவித்திருந்தோமில்லை. சமுதாய சீர்திருத்த நோக்கமே இம்மசோதாவின் உட்கிடக்கையாகும். நான மதக் கோட்பாடுகளுக்கு மரியாதை செலுத்தக்கூடியவனுக இல்லாமலிருக்கலாம்; ஆனால் அடுத்த வீட்டுக்காரரின் (மத, நம்பிக்கைக்கு மதிப்பளித்து தீர வேண்டும். அதும் பாராளுமன்ற சட்டத்தை சட்ட சபையில் நிறைவேற்றப் புகுமுன், வாக்காளர்களை கலந்து அறியாமல் சிறந்ததோர் ஆளாகி அவர்களது சம்மதத்தைப் பெற்றாக வேண்டும். இம்மசோதா நிறைவேற்றப்படுமேல், அதன் விளைவு தேர்தல் காலங்களில் மிக மிகக் கேவலமாகப் பாதிக்குமென எச்சரிக்கிறேன்.

— பட்டாபி சீதாராமய்யா

பகுத்தறிவுக்கு ஒத்து வரவில்லையென்பதற்காகவும் ஒரு நிமிதத உடன்பாடுக கொள்கை யிருக்க வேண்டுமென்பதற்காகவும், புராதன பழக்க வழக்க சம்பிரதாயங்களை விட்டுவிடத் துணிவது தவறாகும். மக்களின் (மத) நம்பிக்கைகளுக்கு மதிப்புக் கொடுத்து, சட்டம் செய்ய முன் வர வேண்டும். பிரதம மந்திரியும் சட்ட மந்திரியும் மனம் வருந்தத்த ஆசைபடுகிறேன். கூட்டுக்குடும்பம், வாரிசு பாத்திரம், பெண்ணுக்கு சொத்துரிமை ஆகியவை பற்றி மசோதாவில் காணப்படும் ஷரத்துக்களை மாற்றியாக வேண்டும். என்ன இருந்தாலும், நாமெல்லாம் இந்துக்கள் அல்லவா? இதனை மறக்க முடியாது. நீங்கள் வகையில் தீமை என்று கருதலாம். ஆனால் நானெல்லாம் செய்வேன். இந்து வாழ்க்கை முறை அப்படியிருக்கிறது! நமது வாழ்க்கையைப் பிணைப்பட்டிருக்கும் பழைய சம்பிரதாய ஐதீகங்கள் நிலைபெற வேண்டுமென்பதுதான் எனது வாதம்.

— அல்லாடி கிருஷ்ணசாமிஐயர்

இந்திய மத்திய சட்ட சபையில் இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய விவாதத்தின் போது, காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையாவும், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் அவிழ்த்துவிட்ட கண்டனக் கணைகளில் ஒரு சிறு பகுதியை மேலே எடுத்துக் காட்டியுள்ளோம். இந்தியத் தேசீய காங்கிரஸின் தலைவர் — காங்கிரஸ் வரலாற்று நூலாசிரியர் — நாலாண்டு காலமாக சீர்திருத்த பட்டணியைப் பேற்றுவைத்திருப்பவராகப் பலபட்டங்களைக் கொண்டுள்ளவரும் பொறுப்புள்ள தேசபக்தர் ஒருபக்கம்; சட்டத்தைக் கரைத்துக் குடித்த வா-நீதியை நெறியினின்று வழங்குபவர் — பார்ப்பனத் தலைவர்களின் பெருமைக்குரிய வழிகாட்டி — இந்துமத தத்துவ விசாரணை புலவர் இன்னொரு பக்கம். பட்டாபியும் அல்லாடியும் பாராளுமன்றத்தில் கர்ச்சித்து, சலசலப்பூட்டி சர்க்காரையும் சட்ட மந்திரியையும் வாட்டுகிறார்கள்!

இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் வெற்றி தோல்வியையே பொறுத்திருக்கிறது என்று மந்திரி சபையின் வாழ்வு வீழ்ச்சியும், என்று முன்பு குறிப்பிட்டிருப்பதும், எம்தா சில டல இந்தக் காரணம் செய்தாவது மசோதாவை நிறைவேற்றித் தந்து

தவுங்கள் என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டிருப்பதையும் நேயர்கள் அறிவர். மசோதாவின் நடுவைத் தளர்த்தும் சூழ்ச்சி, உயிரைச் சிதைக்கும் சூழ்ச்சி — என்ற வேண்டுமா திருத்தங்கள் செய்து அப்பால் புறந்தள்ளி விடுங்கள், நிறைவேற்றவிட்டோம் என்று கூறி — என்ற பொருளில் அனைவர் நேருவின் சொற்பொழிவு இருந்ததை நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். பல போக்கையும் கருத்துகளையும் சகிலையும் புறக்கணிக்க முடியாமலும், அந்த மாதத்தில் வைதீகபுரியவரின் ஆதரித்துக்கும் ஊக்கும் காத்து நிற்கக்கூடிய அஞ்சும் உள்ளம் மனமை காட்டும் இல்லாமலும் இரண்டுங்கெட்ட நிலையில் உண்டாடும் நேருவின் போக்கை எழுத மாலை மணி யிருக்கிறோம், மசோதாவை உயிரான அம்சத்துள்ள பகுதிகளையெல்லாம் வடிகட்டி பிழிந்தெடுத்துக் கொண்டு, சக்கையை சட்டம் என்ற பெயரில் காணும் வரும் காட்சி வேண்டாம். திருத்தங்களெதுவுமின்றி மசோதாவை அப்படியே நிறைவேற்றும் செயல் வல்லமை நம்மிடமில்லை, ஓ

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

'சீனாவுக்கு அங்கீகாரமளிப்பது ரஷ்யாவுக்கு சரணுவதே'

—:0:—

கம்யூனிஸத்துக்கு இடங்கொடுப்பதாமென யு. எஸ். செனட்டர் ஓலம்!

—:0:—

பார்மோஸாவும் பறிபோகுமே யென்று கதறுகிறார்!

'சீனாவை அமெரிக்கா அங்கீகரிக்குமேல், ஆசியா மக்கள் உள்ளங்களில் அமெரிக்காவின் நல்லெண்ணம் பற்றி அதிதீவிரமான ஐயப்பாடுகளை எழுப்பி தீரும்'

என்பதாக செனட்டர் ஹோமர் பெர்குஸன் (குடியரசுவாதி) 12-ந் தேதியன்று குறிப்பிட்டார்.

தோழர் பெர்குஸன் செனட் சார்பில உலகச் சுற்றுப் பயணமொன்று நிகழ்த்திவிட்டு, இப்போது தான் வாஷிங்டனிலிருந்து திரும்பியுள்ளார். சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு அங்கீகாரமளிப்பது பயங்கரப் போரில் சரணடைவதேயாகுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார். "கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுவதில் நமக்கு நல்லெண்ணமும் அக்கறையுமில்லை யென்பதையே அது உலகுக்கு உணர்த்தும். பர்மா, தாய்லாந்து, இந்தோ சீனாப் பகுதிகளில் நுழைய மாவோ கம்யூனிஸ்டுகளுக்கு அழைப்பு விடுவதாகும். சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு அங்கீகாரமளிப்பது" என்று செனட்டர் பெர்குஸன் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் தொலை கிழக்குப் பகுதிப் பாதுகாப்புக்கு உயிர் நாடியான இடம் பார்மோஸா என்பது பற்றி அமெரிக்கா இராணுவ அதிகாரிகளிடையே ஒரு மாதிரி கருத்து இருந்து வருகிறது. சீனச் செஞ்சேனையை பார்மோஸாவுக்குள் நுழைய விட்டுவிடுவோமேயானால், அதை ரஷ்ய ஆதிக்கத்தின் கீழ் ஒப்படைத்தவர்களாகவே ஆவோம் என்று அவர் தொடர்ந்து எச்சரித்தார்.

கம்யூனிஸ்டு சீனாவுக்கு அங்கீகாரம்

அமெரிக்காவை எதிர்பார்க்காது பிரிட்டன்

டிசம்பர் 15-ல் பிரிட்டிஷ் மந்திரி சபை கூட்டத்தில், சீனாவின் புதிய ஆட்சிக்கு அங்கீகாரமளிப்பது பற்றி முடிவு செய்யப்படுமெனத் தெரிகிறது. முடிவு எடுக்கப்பட்டால் உடனடியாக அறிக்கை வெளியிடப்படுமென்று தெரிகிறது.

கம்யூனிஸ்டு சீனாவுக்கு அங்கீகாரம் அளிக்கும் விஷயத்தில் அமெரிக்காவை எதிர்பார்க்காமலே பிரிட்டன் முடிவு செய்யுமென்று தெரிகிறது.

இந்தோசீனாவில் சீனக் கம்யூனிஸ்டு படையெடுப்பு இப்போதில்லை

முதலில் அங்கீகாரம் பெறுவதே அவர்கள் நோக்கமாம்

லண்டன், டிச. 14—

தங்கள் சர்க்காருக்கு அங்கீகாரம் கிடைக்கும்வரை, சீனக் கம்யூனிஸ்டுகள் எதுவும் செய்யப்போவதில்லை என்றும், ஆகவே சீனக் கம்யூனிஸ்டுகள் இந்தோ சீனாவுக்குள் இப்போது புகமாட்டார்கள் என்றும் இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இருந்தாலும் இந்தோசீன எல்லைக்கு வெகு சமீபத்திலேயே கம்யூனிஸ்டுகள் இருப்பதால், அவர்கள் உள்ளே வரும் பட்சத்தில், அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு, காவலில் வைக்கப்படுவார்கள் என்று, பிரெஞ்சு ஹைகமிஷனர் பிகனுன் அறிவித்திருக்கிறார்.

வியட்னாமில் கம்யூனிஸ்டுகள் புகமாட்டார்கள் என்று வியட்னாம் ரேடியோ அறிவித்திருக்கிறது. வியட்னாம் பலமுள்ளதாகவும், பலப்படுவதைக் கண்டு பயப்படுவதை பலப்படுத்துவதால் காரியம் பலிக்காது என்ற எண்ணம் பிரெஞ்சு சர்க்காருக்குக் கவலையை உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

கொழும்பு, டிச. 14—

ஆஸ்திரேலியா 'இமிடேஷன்' அரிசியை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளுக்கு அனுப்ப உத்தேசித்திருப்பதாக இங்கு கூறப்படுகிறது. இது விஷயமாக இலங்கை சர்க்கார் இன்னும் எவ்வித முடிவும் செய்யவில்லை.

மாசேதுங்சீனா மாண்புடன்தான் திகழ்கிறது!

பொருளாதாரப் பூகோளத்தை மாற்றமுடியும் அணுக்குண்டால்!

—:(0):—

சோவியத் அயல் நாட்டு மந்திரி தகவல்

'சீனாவில், எல்லாம் ஒழுங்காகவே நடந்து வருகிறது. மாசேதுங்கின் சீனாவை அனைத்து நாடுகளும் அங்கீகரித்து விடப்போவது உறுதி. இது அவசியமும் நியாயமானதுமாகும்' என்று சோவியத் அயல் நாட்டு மந்திரி ஆண்டிரி விஷின்ஸ்கி டிச. 13-ல் குறிப்பிட்டார்.

ஐ. நா. வில் கலந்து கொண்டு நியூயார்க்கிலிருந்து மாஸ்கோவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் விஷின்ஸ்கி.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

மலைகளைப் பிளந்து, பாலைவனப் பகுதிகளை வளம் கொழிக்கவையாக்க அணு சக்தியைப் பயன்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது. அணுக்குண்டால் பொருளாதார பூகோளத்தையே மாற்றிவிட முடியும்."

மாலை மணி

சென்னை 15—12—49 வியாழக்கிழமை

விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்!

காண்போர்க்குக் களிப்பூட்டும் கவின்நகர் என்று பாரோர் புகழும் பெற்றி வாய்ந்த 'காஷ்மீர்', இன்று கேட்போர் சிரிக்கும் வகையில் வைக்கப் பட்டிருக்கிறது!

இந்தியா- பாக்கிஸ்தான் ஆகிய இருநாடுகளின், தனிப்பட்ட மாற்சரியங்களுக் கிடையே, உதைபடும் விளையாட்டுப் பொருளாக இருந்து வருகிறது காஷ்மீர்! அதன் நிலை, நிலையற்றதாக ஆக்கப் பட்டு விட்டது!

காஷ்மீர் பற்றிய தகராறுகளைத் தீர்த்துவைக்க, சென்ற ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக முயன்று வருகிற ஐக்கிய நாடுகளின் காஷ்மீர் கமிஷன், தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப்பற்றி, அறிக்கை ஒன்று விடுத்துள்ளது இப்பொழுது.

காஷ்மீர் பற்றிய தகராறு தீர பெருந்தடைக் கற்களாக இருக்கும் முக்கிய மூன்று பிரச்சினைகள், (1) 'ஆஸாத்' படை பைசல், (2) இந்தியா பாக். இராணுவ வாபஸ் (3) வடக்கு காஷ்மீர் ஆகியவையாகும், என்னும், இம்மூன்றுபிரச்சினைகள் குறித்தும் தெளிவான உறுதியான — உண்மையான முடிவுக்கு வர இரு நாடுகளும் ஒத்து வரவில்லை என்றும் ஐ. நா கமிஷன் அறிக்கை அறிவிக்கிறது.

காஷ்மீர் எந்தப்பக்கம் இருக்கவேண்டும் - இந்தியா பக்கமா அல்லது பாக்கிஸ்தான் பக்கமா என்பதை நிர்ணயிக்க, பொது வாக்கெடுப்பே உரியவழி என்று தீர்மானிக்கப் பட்டிருந்தும், வாக்கெடுப்பைச் சாத்தியமாக்கும் முறையில், சூழ்நிலை ஏற்படவில்லை என்று கமிஷன் தெரிவிக்கிறது. சூழ்நிலை ஏற்படாததற்குக்காரணம். மேற்கூறப்பட்ட மூன்று பிரச்சினைகள் குறித்தும் முடிவான முடிவு ஏற்படாததுதான் என்று அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் தானிருக்க உரிமை உண்டென்றும், தன்னுடன் சமத்துவம் கொண்டாட பாக்கிஸ்தானுக்கு உரிமை இல்லை என்றும் இந்தியா வாதிட்டு நிற்கிறது.

இந்தியா-காஷ்மீர் இணைப்புச் சட்டம் பூர்ணமானதல்லவென்றும், 1947 ஆகஸ்டு 15-ந் தேதி யன்றே பாக்கிஸ்தானுடன் நடப்பு நீடிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டதாகவும், உள்ளூர்ப் படைகளான ஆஸாத் துருப்புகளைக் கலைப்பதானால், அதற்கேற்ப சமஸ்தானப் படைகளோ, எஞ்சியுள்ள இந்தியத் துருப்புகளோ கலைக்கப்படுவதும் அவசியமென்றும், வடகாஷ்மீரில் பொறுப்பேற்க இந்தியாவுக்கு உரிமையே கிடையாதென்றும் பாக்கிஸ்தான் அறிவிக்கிறது.

இவ்வாறு இந்தியா-பாக்கிஸ்தான் இருநாடுகளும் எட்டிக்குப் போட்டி போட்டுக் கொண்டு, காஷ்மீரைக் களமாக்கி வருகின்றன. இந்தியா—பாக்கிஸ்தான் சர்க்கார்களின் மனப்போக்குக்குக் காஷ்மீர் இரையாகிறது. இரண்டு நாடுகளும் தங்கள் தங்கள் வீராப்புகளை விடாப்பிடியாகச் சாதிக்க நினைக்கின்றனவேயல்லாமல், காஷ்மீரைப் பற்றியோ, அங்குள்ள மக்களைப் பற்றியோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இரண்டு நாடுகளிடையேயும் இல்லாத காரணத்தால்தான், தகராறு தீர இன்னமும் வழியேற்படவில்லை என்று ஐ. நா. கமிஷன் கூறுகிறது.

கட்டாயப் பஞ்சாயத்து முறை மூலமல்லாது வேறு வகையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இயலாது என்பதை ஐ நா கமிஷன் தெளிவாக்குகிறது.

காஷ்மீரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியவர்கள் காஷ்மீர் மக்களே யல்லாமல், இந்தியாவாகவோ, அல்லது பாக்கிஸ்தானாகவோ இருக்கக் கூடாது. காஷ்மீரை அநியாயமாக அபகரித்துக் கொள்வது என்பது இரு நாடுகளுக்கும் உரியகொள்கைஅல்லவெனில், இரண்டு நாடுகளும் தம் சக்தியையும் செல்வாக்கையும் மீட்டுக்கொண்டு, ஓட்டெடுப்புக்கு இடமளிப்பதே நீதியும், நேர்மையுமான செயலாகும். இந்தியாவும், பாக்கிஸ்தானும் அந்தப்படி விலகி நிற்கவேண்டும் என்று. ஐ. நா. பஞ்சாயித்து வற்புறுத்துமாயின், அதற்கு இணங்கி நடக்க இந்தியா, பாக்கிஸ்தான் இருநாடுகளும் ஒப்பவேண்டும்.

இரு நாடுகளையும் சேர்ந்த எந்தவிதத் தலையிடுதலும் இல்லாமல், காஷ்மீர் வாக்கெடுப்பு நடைபெற்றால்தான், உண்மையான — உறுதியான முடிவு ஏற்பட வழியேற்படும். இதைச் செய்ய ஐ. நா. அவை முன் வரவேண்டும். இதற்கு இருநாடுகளும் ஒத்துவர எண்ணமில்லை என்றால், இரண்டு நாட்டிற்கும் சுயநலம்தான் முக்கியமே யொழிய, உண்மைக் கொள்கை அல்ல என்பது தானாகப் பெறப்படும். ஆகவே, அதற்கு இடந்தராமல் இரு அரசாங்கமும் பார்த்துக் கொண்டு, உலகில் நற்பெயரோடு நின்று நிலவ முயலல் வேண்டும்.

காஷ்மீரின் எதிர்காலத்தைப் பற்றிய முடிவு, காஷ்மீர் மக்களின் கையில் இருக்க வேண்டும். இல்லையாயின் காஷ்மீர் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்!

அணுக்குண்டு அமெரிக்காவுக்கு ஆத்மீகப் பசி!

வர்த்தகத்துக்கு வழி காட்டுகிறோம்; பதிலுக்கு ஆத்மீகம் தாருங்கள் என்கிறது

அமெரிக்க வேதாந்த சங்கத் தலைவரின் அதிய ஆலோசனை!

"இந்தியாவும், அமெரிக்காவும் எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க முடியும்.

அமெரிக்கா தனது வர்த்தக நுட்பங்களை இந்தியாவுக்கு அளித்து, பதிலுக்கு இந்தியா விடமிருந்து ஆத்மீக தத்துவங்களைப் பெறலாம்.

அமெரிக்கர்கள், வரவர மதப் பற்றுடையவர்களாகிக் கொண்டு வருகின்றனர். அவர்களுடைய ஆத்மிக விருப்பங்கள் பூர்த்தியாக கிறிஸ்தவ மதம் போதாதென்று நினைக்கின்றனர்.

தியானம் என்பது, கிறிஸ்தவ மிஷினரிகளுக்குத் தெரியாது. ஆத்மீக வாழ்க்கைக்குத் "தியானம்" மிகவும் முக்கியமானது. ஆகவே, அமெரிக்காவில் வேதாந்தத்துக்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப் பட்டிருக்கிறது."

என்று வாஷிங்டன் வேதாந்த சங்கத் தலைவர் தோழர் சி. [illegible] கூறுகிறார்.

உலகத்தில் பல நாடுகளுக்கிடையே பண்டமாற்று நடைபெறுவதை நாம் அறிவோம். அப்பண்டமாற்று முறையால் அந்தந்த நாடும் தனது பொருளாதார நிலையைச் சீர்படுத்திக் கொண்டு நாட்டு மக்களுக்கு நல்வாழ்வை வளர்க்க முயலுவது தான் வழக்கம். ஆனால், அமெரிக்க வேதாந்த சங்கத் தலைவருக்கு இது பற்றிக் கவலையே இல்லை. இந்தியாவிடமிருந்து ஆத்மீகத்தைப் பண்டமாற்றாகப் பெறவிரும்புகிறார்.

கிறிஸ்தவ மதம் போதிக்கும் ஆத்மீகம் அமெரிக்கரின் ஆத்மீகப் பசியை அடக்கப் போதவில்லையாம்! ஆகவே இந்தியாவின் ஆத்மீகத்தை கொஞ்சம் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யுங்கள்; பதிலுக்கு நாங்கள் வர்த்தக நுட்பங்களை உங்களுக்குத் தருகிறோம் என்று கூறும் அந்த வேதாந்த சங்கத் தலைவரைக் கேட்கிறோம், "ஐயா, வேதாந்த சங்கத் தலைவரே! தங்கள் ஆத்மீகப் பசியை நாங்கள் நன்கு அறிந்து கொண்டோம். ஆனால், அந்தப் பசியை போக்க கிறிஸ்து மதம் போதவில்லை என்று, இந்து மதத்தை நாடுவது கண்டோம் [illegible] பரிதாபப்படுகிறோம். ஏனெனில், இந்து மதம் காட்டும் ஆத்மீகம், இந்த நாட்டிற்கே பயன்படவில்லை. பயன்படாதது மட்டுமல்ல; பாதகமும் விளைத்திருக்கிறது. இந்தியாவின் ஆத்மீகம் எங்களுக்கு அளித்திருக்கும் பரிசுகள் என்ன தெரியுமா? காயம் அநித்யம், உலகம் மாயை, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றும் மனிதனுக்கு இருக்கக் கூடாதவை! ஆனால், நால்வருணம் உண்டு, அதிலே மேல்கீழ் உண்டு; உன்னை ஒரு சாரார், உழைக்க ஒரு சாரார் என்ற நிலையுண்டு என்பவைகளே, இந்தியாவின் ஆத்மீகம் இந்திய மக்களுக்கு அளித்திருக்கும் [illegible]யும், பரிசுகளுமாகும்!

இவ்வடிப்பட்ட அதிசய ஆத்மீகத்தையா தாங்கள் விரும்புகிறீர்கள்! அடடா [illegible], தாங்களுக்கு [illegible]! அமெரிக்கா பொன் விளையும் பூமி, உல்லாசப் பூமையரின் உறைவிடம், உலகைய கட்டியாள வேண்டும் என்ற ஆசைக் [illegible] பர்களின் பாசறை. இவ்வளவு மண், பெண், பொன் மூன்றிலும் அளவுகடந்த பற்றுவைத்திருக்கும் அமெரிக்காவுக்கு இந்த மூன்று ஆசையும் கூடாது என்கிற [illegible] ஆத்மீகம் எப்படி ஜீரணமாகும்? என்று.

சரி, தோழர் [illegible] விருப்பப்படியே அமெரிக்கா ஆத்மீகத்தை [illegible] கொள்ளட்டும். அவ்வளவு ஆத்மீகத்தில் அக்கறை கொள்ளும் நாட்டுக்கு அணுகுண்டு எதற்கு என்று கேட்கிறோம். ஒரு புறம் அணுகுண்டு ஆராய்ச்சி, மற்றொரு புறம் ஆத்மீக ஆராய்ச்சி! என்னவிசித்திர! உலகை ஏமாற்றவா இத்தகைய இரட்டை வாழ்க்கை. சரி, அணுகுண்டு அமெரிக்காவும், ஆத்மீக இந்தியாவும் எப்படியேனும் கட்டியழட்டும். இவ்விரு நாடுகளுக்கும் காலம் தக்க பாடம் கற்பிக்கட்டும்.

அறிவுக் கதிர்!

மக்களனைவரும் ஏற்றத்தாழ்வின்றி சரிசமமாகவே படைக்கப்படுகின்றனர். ஆண்டவன் அவர்களுக்கு என்றும் பறிபோகக்கூடாத நிலையான உரிமைகளை அளித்துள்ளான். உயிர் வாழ்க்கை, சுதந்தரம் இன்ப நாட்டம் ஆகியவை இவ்வுரிமைகளுள் அடங்கும். இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே மக்களிடையே சர்க்கார்கள் ஏற்படுகின்றன இங்கு சர்க்கார்கள் தம் அதிகாரத்தை மக்களின் அனுமதிமீதே பெறுகின்றன. எந்த சர்க்காரேனும், இந்நோக்கங்களுக்கு அழிவு ஏற்படுத்துமாயின், அதனை மாற்றவோ, அடியோடு ஒழித்துப் புதியதொரு சர்க்காரை அமைக்கவோ மக்களுக்கு உரிமையுண்டு.

—ரூஸ்ஸோ.

திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

நாள் : 1--1--1950 ஞாயிற்றுக்கிழமை

இடம் : வேலாயுதம் பந்தல்

தலைவர் : கோவில்பட்டி ஈ. வி. அ. வள்ளிமுத்து

துவக்கிவைப்பவர் : பெத்தாப்பாளையம் பி. பழனிச்சாமி

இரவு

தோழர் அண்ணாத்துரையும் அவரது குழுவினரும் நடிக்கும் நாடகம் நடைபெறும்

கட்டணம்: வரவேற்புக் குழு உறுப்பினர்—ரூ. 5
பிரதிநிதி (உணவு உள்பட)—ரூ. 2

எம். எஸ். மணி,
ஜி. பராங்குசம்,
செயலாளர்கள்.

என். சங்கரன்,
வரவேற்புக் கழகத் தலைவர்.

சுதந்தர இயக்கத் தலைவர்மீது கைக் குண்டு வீச்சு

எரிட்ரியாவில் சம்பவம்

கெய்ரோ, டிச. 13 — எரிட்ரிய சுதந்திர இயக்கத்தைச் சேர்ந்த மூன்று தலைவர்கள் மீது இரு தேசிகள் கைக் குண்டு வீசினர் என்றும் ஆனால் குண்டுகள் வெடிக்கவில்லை என்றும், போலீசார் உடனே அவ்விடத்திற்கு வந்து குண்டு வீசியவர்களைத் துரத்திச் சென்றனர் [illegible] தெரிகிறது. [illegible] சில மேசர்களுக்கும் ராய்டர் நிருபருக்கும் பிரிட்டிஷ் விளம்பர அதிகாரிகளுக்கும் [illegible] [illegible] எத்தியோப்பியாவுடன் எரிட்ரியா சேருவதில் யாரும் தலையிடக் கூடாதென்று அதில் எச்சரிக்கப் பட்டிருக்கிறது. —ரூளோர்

கழக நடவடிக்கைகள்

திருவல்லிக்கேணி— இவ்வூர் கிளையின் சார்பில் 18-11-49ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் வரவு ரூ. 61-8-0. செலவு ரூ 60-9-0. கையிருப்பு, ரூ 0-15-0 எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

ஆற்காடு— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா வரவு செலவுக் கணக்கு வருமாறு:—

செலவு ரூ.	53-14-11
நன்கொடை வரவு	45-1-0
வரவுக்குமேலான செலவு	8-13-11

* * *

ஸ்ரீவில்லிபுத்தூர்— 27-11-49ல் கூடிய இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழு கூட்டத்தில், தோழர்கள் எம். எஸ். சிவசாமி, அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, தங்கப்பழம் ஆகியோரைக்கொண்டு 18-12-49ல் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. (வி-உ)

* * *

திருப்பத்தூர்: இவ்வூர் தி. மு. க. துவக்க விழாவின் மொத்த

வரவு	ரூ. 68-0-0
செலவு	ரூ 65-15-0
கையிருப்பு	ரூ 2-1-0

* * *

சென்னை ஐஸ்ஹவுஸ் பேட்டை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழு கூட்டம் 27-11-49ல் கூடி, பல முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது.

* * *

மேட்டுப்பாளையம்:—இவ்வூர் கிளையின் செயற்குழு, 27-11-49ல் கூடி, டிசம்பர் மாத இரண்டாவது வாரத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்களை அழைத்து ஓர் பொதுக்கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்தது.

* * *

தேனி:—இவ்வூர் கிளையின் செயற்குழு 23-11-49ல் கூடியது. அதுபோது, மதுரை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் தி. செல்லையா, சு. மாரிமுத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

* * *

குளூர்:—இவ்வூர் கழகக் கட்டடத்தில் 4-11-49ல் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஈ. குப்புசாமி தலைமையில் பல உறுப்பினர்கள் சொற்பொழிவாற்றினர். பின் தோழர் எஸ். கே. கிருஷ்ணன் நன்றி கூற, கூட்டம் முடிவுற்றது.

* * *

கடையநல்லூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 3-12-49ல் தோழர் முகம்மது தலைமையில் நடைபெற்றது. தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் ஏ. வி. ஏ. ஆசைத்தம்பி அவர்களைக் கொண்டு ஓர் கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின்பு, தோழர்கள் திராவிடமணி, சி. நடராசன், இரா. பழனிச்சாமி, கே. எஸ். முகம்மது இஸ்மாயில், சித்ரமணி, பி. சுப்பையா ஆகியோர் கழகத்திற்கு பத்திரிகை நன்கொடையாளர்களாக இருக்க ஒப்புக்கொண்டனர்.

* * *

சங்கரலிங்கர் கோவில்—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 4-12-49ல் தோழர் ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது தோழர்கள் டே. நாராயணசாமி, டி. ஆர். சுப்பையா ஆகிய இருவரும் நெல்லை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

சென்னை, புதுப்பேட்டை (31-வது வட்டம்):— இக்கிளையின் செயற்குழுக் கூட்டம் 3-12-49ல் நடைபெற்றது. அதுபோது, நவம்பர் மாத இறுதி வரை செலவுக் கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 23-11-49ல் நடைபெற்ற மூதத் துவக்க விழாவிற்கு மொத்த வரவு ரூ 69-4-9; செலவு ரூ 68-13-6 கையிருப்பு ரூ 0-7-3. (வி-உ)

* * *

அய்யம்பாளையம்:—இவ்வூர் கிளையின் செயற்குழு கூட்டம் 4-12-49ல் நடைபெற்றது. அதுபோது, தோழர் எ. தங்கவேலு கொண்டுவந்த பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செயற்குழுவும் திருத்தியமைக்கப்பட்டது. செயலாளர்:- வி. எம். வேலு; துணைச் செயலாளர்:- எம். தங்கவேலு; பொருள் உறுப்பினர்:- என். எம். தங்கவேலு; விளம்பர உறுப்பினர்: என். வி. ராமையா. ஏனைய செயற்குழுவினர்கள்:- எம். கோபால்சாமி, ப. தட்சிணாமூர்த்தி, எஸ். நாராயணசாமி, சி. பெருமாள், எஸ். கே. குமாரவேல் (செல்லூர்) சேனியப்பன் (அழிஞ்சமங்கலம்) ஜி. காத்தையன் (அ. மங்கலம்)

* * *

குடியேற்றம் சந்தைப்பேட்டைக் கிளையின் செயற்குழுக்கூட்டம் 3-11-49ல் தோழர் ப. துரைராசு தலைமையில் கூடியது. அதுபோது பொதுமக்களின் அறிவு வளர்ச்சிக்கான நலனை முன்னிட்டு செல்லூர் பேட்டையில் வானொலி ஒலி பெருக்கி (Radio Louc Speaker) ஒன்றும், நகராண்மைக் கழகப் படிப்பகம் ஒன்றும் அமைக்குமாறு நகராண்மைக் கழகத்தைக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் கழக வளர்ச்சிக்கென சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

திருவனந்தபுரம்—இந்நகர் தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் 4-12-49ல் தோழர் அண்ணாமலை அவர்கள் இல்லத்தில் கூடியது. தோழர் பி. எஸ். மணி, தலைமை வகித்தார். அதுபோது, இதுவரை தற்காலிகமாகப் பணியாற்றிவந்த செயற்குழு கலைக்கப்பட்டு புதிய செயற்குழுவொன்று கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டது.

செயலாளர்- வி. எஸ். மணி; துணைச்செயலாளர்- சி. பி. செல்வம்; விளம்பர உறுப்பினர்- இராமகுட்டினன். ஏனைய செயற்குழுவினர்கள்— ஆர். எஸ். முருகவேல், பி. வேலு; பி. எஸ். மணி, சிவராமன், எ. ஈ. கிருட்டிணன். (வி-உ)

* * *

திருச்சேறை— இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 6-12-49ல் தோழர் சு. கோபாலசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் வீ. சங்கரன், கா. முருகையன் ஆகிய இருவரும் தஞ்சை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு இதுவரை துணைச்செயலாளராகப் பணியாற்றி வந்த தோழர் பா. செகநாதன் தன் சொந்த அலுவல் காரணமாக விலகிக்கொண்டதால், அவருக்குப்பதிலாக தோழர் டி. எஸ். கோவிந்தராசன் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (வி. உ)

* * *

செம்பனார்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 7-12-49ல் நாகம்மையார் தேனீர் விடுதியில் நடைபெற்றது. அதுபோது, டிசம்பர் இறுதிக்கு தஞ்சை மாவட்டக் கழகம் அமைப்பதற்காக தெரு தோழர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ள, "திராவிட நாடு" ஜாமீன் தொகை தருப்பியளிக்கப்பட்டமைக்கு பாராட்டியும், "பொங்கல் விழா"வை மிகச் சிறந்த முறையில் கொண்டாடுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி. உ)

* * *

கடலூர் (மதுரை) இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 10-12-49ல் தோழர் வீ. பரமன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது; தோழர் அண்ணாதுரை அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது இவ்வூருக்கும் அழைப்பதென்றும், வரும் 20-12-49ல் தோழர்கள் சி. பி. சிற்றரசு, பெரி குளம் வே. துரைராசு ஆகியோரைக்கொண்டு ஓர் கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

இடைக்காட்டூர்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 11-12-49ல் கூடியது. அதுபோது, தோழர் எஸ். வி. அப்துல்லா செயலாளர் பதவிலிருந்து விலகியதால், அவர் இதுவரை பணியாற்றி வந்த செயலாளர், விளம்பர உறுப்பினர் ஆகிய இரு பொறுப்புகளிலிருந்தும் விலக்கிக் கொண்டார். பின் தோழர் கே. எம். செய்து இப்ராகிம் செயலாளராகவும், எம். ஆர். சங்கரன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (வி-உ)

* * *

காஞ்சீபுரம்:— இவ்வூர் பெரிய அம்மாளந் தெரு நகர உட்கிளையின் செயற்குழுக் கூட்டம்; தோழர் ஏழுமலை தலைமையில் 8-12-49ல் கூடியது. அதுபோது வரவுசெலவு கணக்கு பார்க்கப்பட்டதின் விவரம் மொத்த வசூல் தொகை ரூ140-0-0 செலவு ரூ 132—8—0 கையிருப்பு ரூ 7—8—0 (செ-ர)

தூத்துக்குடியில் நாடகங்கள்

★

திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக நடத்தப்படும்

★

24—12—49ல்

"சந்திரமோகன்"

★

25—12—49ல்

"நீதிதேவன் மயக்கம்"

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, தோழர் சி. என். அண்ணாதுரை அவரது குழுவினர் நடிக்கிறார்கள்

கழகத் தோழர்களும், பொது மக்களும் ஆதரவு காட்ட வேண்டுகிறேன். எல்லோரும் டிக்கட் பெற்றுக் கொண்டு அதன் மூலம் கழக நிதிக்குப் பொருள் உதவி கடமையுணர்ச்சியைக் காட்டுமபடி வேண்டிக்கொள்கிறேன்.

செயலாளர்,
நாடகக் குழு, தூத்துக்குடி.

டர்பனில் இந்தியர் தொகை அதிகமாகிறது

டர்பன், டிச. 14—

டர்பனில் இந்திய மக்கள் தொகை மிகவும் அதிகரித்து வருவதால், இப்பொழுது அங்கு ஐரோப்பியர்களுடன் இந்தியர்கள் கிட்டத்தட்ட சரிசம எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

சென்ற மாதத்தில் மட்டும் இந்திய பிறப்பு விகிதம் மும்மடங்கு அதிகரித்திருக்கிறது. 1120 பேர் பிறந்ததில் 551 பேர் இந்தியர், 316 பேர் ஆப்பிரிக்கர்.

டர்பன் நகரின் மக்கள் தொகை 375834 பேர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதில் 130231 ஐரோப்பியர்கள், 124565 இந்தியர், 109438 ஆப்பிரிக்கர், 11595 கலப்பு ஜாதியினர்.

பிரிட்டிஷ் தூதுக்குழு இலங்கை வருகை

கொழும்பு, டிச. 14—

இலங்கை-பிரிட்டிஷ் தேயிலை ஒப்பந்தத்தை 1950-51க்குப் புதுப்பித்துக் கொள்வதற்காக பிரிட்டிஷ் உணவு மந்திரி காரியாலய தூதுக் குழு ஜனவரியில் இங்கு வர விருக்கிறது.

இவ்விஷயமாக இலங்கையும் இந்தியாவும் ஒன்றை ஒன்று கலக்காமல் பிரிட்டனுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறது. 1950 மார்ச் வரையில் 13 கோடி பவுண்ட் தேயிலை அனுப்புவதாக இலங்கை ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி 10 கோடி பவுண்ட் தேயிலையை இலங்கை பிரிட்டனுக்கு அனுப்பிவிட்டது.

—ரூட்டர்.

பாட்டு இசைக்கும் தோழர்களுக்கு

சென்னை நகரில் வதியும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில், நன்றாகவும், இனிமையாகவும் பாட்டு இசைக்கும் தோழர்கள் சிலர் முதலாவதாகத் தேவைப்படுகிறார்கள். அவர்கள் மேடையேறி நின்று பாட்டுப்பாடும் திறமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அத்தகைய பணியினைச் செய்ய ஆர்வமுள்ள தோழர்கள் 20—12—49 செவ்வாயன்று மாலை 5-மணிக்கு மேல் சென்னை, மண்ணடி, முத்தியால்பேட்டை, செட்டித் தெரு, 45 எண்ணுள்ள கட்டடத்தில் வந்து கூடுமாறு அழைக்கப்படுகிறார்கள். விவரம் நேரில் அறிவிக்கப்படும்.

செயலாளர்,
தி. மு. க. பிரசாரக் குழு.
தலைமை நிலையம், சென்னை.

நகரசபை வரி விதிப்பு அப்பீல் கமிட்டி

தோழர் ராமலிங்கம் வெற்றி

சென்னை, டிச. 14—

சென்னை நகரசபையின் சாதாரணக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, "வரி விதிப்பு" அப்பீல் கமிட்டிக்கு தோழர் கே. ராமலிங்கத்தை (ஆதிதிராவிடர்) தோழர் ராதா கிருஷ்ண பிள்ளை பிரேரபித்தது, தோழர் அப்துல்காதர் ஆதரித்தார். தோழர் தேசிகாச்சாரியை தோழர் வெங்கடசாமி நாயுடு பிரேரபித்து, தோழர் செங்கல்வராயன் ஆமோதித்தார். தோழர் பார்த்தசாரதி நாயக்கரை தோழர் ராஜன்னா பிரேரபித்து, தோழர் பி. மு. விநாயக முதலியார் ஆமோதித்தார்.

தோழர் பார்த்தசாரதி நாயக்கர், ஆதிதிராவிட வகுப்புத் தோழருக்கு எதிராகப் போட்டியிடுவது நியாயமில்லையெனக் கூறி தோ்தலுக்கு நிற்க மறுத்தார். பிறகு தோழர் இராமலிங்கத்திற்கும், தோழர் தேசிகாச்சாரிக்கும்—ஓட்டெடுத்தபோது தோழர் இராமலிங்கம் 34 வோட்டும், தோழர் தேசிகாச்சாரி 31 வோட்டும் கிடைக்கப்பெற்றனர். தோழர் இராமலிங்கம் வெற்றி பெற்றார்.

சினிமாப்பட நீளம் வெட்டப்படுகிறது

சினிமாப்படங்களின் நீளம் 11,000 அடிக்கு மேல் போகக் கூடாதென்றும், மாதிரிப் படங்களின் நீளம் 400 அடி வரை விதை இருக்கலாம் என்றும் இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக மந்திரி தோழர் திவாகர் மத்திய சட்டசபையில் நேற்று தெரிவித்தார். மாகாண சர்க்கார்களுக்கும் இது பற்றி உத்தரவு பிறப்பித்தாகி விட்டதென்றும், இனி மேற்படி உத்தரவு அமுலாகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியருக்கு முடங்கல்

சர்க்கார் கவனிக்க வேண்டும்

ஐயா!

புகளூர்— வேலூர் காவேரி ஆற்றில் பாலம் கட்டுவதற்கு "சேனன் டக்ரீவ்" கம்பெனியார் காண்டிராக்ட் எடுத்து கடந்த சுமார் 6-மாதங்களாக வேலை நடந்து வருகிறது. இந்தக் கம்பெனியார்பெரும்பாலும் தொழிலாளர்களை நேரடியாக வேலைக்கு அமர்த்திக்கொள்ளாமல் "சப்காண்டிராக்ட்"களின் மூலமாக வேலை நடத்தி வருகிறார்கள். இதனால் இங்கு பாதிக்கப்பட்டவர்களின் பலும் வேதி மிகப் பரிதாபத்திற்குரியதாக இருந்து வருகிறது.

நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளிக்கு 0-8-0 அணா முதல் 1-4-0 வரையிலும், பெண் தொழிலாளருக்கு 0-8-0 முதல் 0-10-0 வரையிலும்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. பஞ்சப்படி கிடையாது. வேலை நேரம் வரையறுக்கப்படாமல் 8-10-12- மணி நேரங்கள்கூட வேலை வாங்கப்படுகிறது. இவ்வளவு குறைந்த சம்பளத்தைக் கொடுத்து நிறைந்த நேரம் வேலை வாங்குவதுடன், ஒரு நிமிடமும் ஓய்வின்றி உறிஞ்சப்படுகிறது உழைப்பை.

இதற்கு காரணங்களால் வெளியூர்களிலிருந்து வேலைக்கு வரும் தொழிலாளர்கள் வேதனை தாங்காது, அதாவது வாழ்க்கைக்குப் போதிய ஊதியம் கிடைக்காத காரணத்தால் ஒரு மாதங்கூட நிலைக்க முடியாமல் பாதிப் பட்டினியுடன் பாடுபட முடியாமல் வேலையை விட்டுச் சென்றும் விடுகிறார்கள். ஆகவே தற்போது மூலமாக வேலையில் அமர்ந்துள்ளோர்களும், சாதாரண தொழிலாளர்களும் இக்குறைந்த கூலிக்கு வேலை செய்ய இயலாதென்று, அதிகக் கூலிபெற ஆக வேலையை ஏதேனும் செய்யக் கோரியும் அடிக்கடி எமயிடத்தில் வற்புறுத்தி வருவதோடு "வேலை நிறுத்தம்செய்வதற்கும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்" போலும் தெரியவருகிறது. வேலை நிறுத்தம் என்பதை நான் விரும்பாத காரணத்தாலும், இதற்கு முழுப்பொறுப்பும் கம்பெனியார் நேரடியான ஒவ்வொருவராக இல்லாமல் இருப்பதுபோல் இருந்து வருவதாலும் கம்பெனியாரும், லேபர் கமிஷனரும், சர்க்காரும் இதில் தலையிட்டு, கீழ்கண்டவற்றை அதாவது தொழிலாளர்களின் உடனடித்தேவைகளை ஈடேற்றவேண்டும்.

(1) 'காண்டிராக்ட்' முறை பூரணமாக ஒழிக்கப்பட்டு "சேனன் டக்ரீவ்" கம்பெனியின் நேரடி நிர்வாகத்தில் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படவேண்டும். இதனால் சப் காண்டிராக்டர்கள் அடிக்கும் கொள்ளை லாபத்தை அதற்கான அலுவல் செலவோடுகூட வேறொன்றைப் போக்கச் சாதனமாக்கிக்கொள்ளலாம்.

(2) 8 மணியாக வேலை நேரம் அமுலாக்கப்படவேண்டும்.

(3) குறைந்தது ஆண்களுக்கு ரூ. 2-8-0 க்குக் குறையாமலும் பெண்களுக்கு ரூ. 1-4-0 க்குக்குறையாமலும் சிறுவர்களுக்கு ரூ. 1-0-0 க்கு குறையாமலும் சம்பளம் அளிக்கப்படவேண்டும்.

(4) வேலை செய்யும்பொழுது எதிர்பாராமல் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்களுக்கு கம்பெனி செலவில் வைத்தியம் செய்விக்கப்பட வேண்டியதோடு உடல் நலம்பெறும்வரை சம்பளத்துடன் லீவும் அளிக்கப்படவேண்டும்.

மேற்கண்டவற்றை கம்பெனியார் அமுலுக்குக் கொண்டு சர்க்கார் உடனடியாக ஆவன ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்-புகைச்சல் பற்றி எரியத் தொடங்காது.

டி. பி. மூர்த்தி.
தவுட்டுப்பாளையம்.

நீதி கிடைக்குமா?

ஐயா!

வணக்கம். சென்னை "தினசெய்தி" ஆபீஸ் யாவற்றுக்கு முன்னறிவிப்புமின்றி நவம்பர் 17-ந் தேதி மூடினார்கள். அங்கு வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆக மூன்று மாதச் சம்பளம் காரியாலயத்தாரால் கொடுக்கப்பட வேண்டும். அதைக் கொடுக்காமல், நோட்டீஸும் கொடுக்காமல் நவம்பர் 28-ந் தேதி கொடுப்பதாகச் சொல்லி, அதற்குப் பிறகு 30-ந் தேதி, பிறகு டிசம்பர் 5-ந் தேதி, பின்னர் 7-ந் தேதி பின்பு 11-ந் தேதி கொடுப்பதாகச் சொல்லி சம்பளம் கொடுக்காமலும், தொழிலாளர்களுக்கு யாதொருவித உதவியும் கொடுக்காமலும் திடீரென ஆபீஸை மூடிவிட்டார்கள். தொழிலாளர்கள் நிர்வாகிகளை ஆபீஸில் சென்று கேட்டால் போலீஸ்காரர்களை விட்டு வாட்டியடித்தார்கள். பிறகு லேபர் கமிஷனரிடம் ரிப்போர்ட் செய்ததாகச் சொன்னதற்கு, இதை நிர்வாகிகளும், ராமதாஸ், மே. ஆறுமுகம் ஆகியவர்கள் தொழிலாளர்களை நோக்கி, "இது ஆர். நாகராஜ் அலுவலகம், நீங்கள் ஒன்றும் கூடி அசைக்க முடியாது" என்று மிரட்டுகிறார்கள். நாங்கள் மொத்தம் 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளோம். இதற்குச் சொந்தக்காரர் ஆர். நாகராஜ ஐயர். இவர் தேசியவாதி. காமராஜருக்கு உற்ற நண்பர். நாங்கள் எங்கள் சம்பளத்தைத் தான் கேட்கிறோமே யொழிய, அதிகச் சம்பளத்தையோ போனஸையோ அல்ல. ஒரு மாதமாகப் பேசுகிறது இதை மூடி. சமரசத்திற்காக அவர்களை சந்திக்கச் சென்றால் அவர்கள் கிடைக்கவில்லை. வாட்டி விரட்டியதாகப் போலீஸுக்கு ஏற்பாடு செய்து தடியடிக்குள்ளாக்குகிறார்கள். இதுதான் தேசியவாதிகள் தொழிலாளர்களுக்குச் செய்யும் நன்மை போலும்!

அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

இப்படிக்கு
'தினசெய்தி' தொழிலாளர்கள்.

இன்னமும் ஒழியவில்லை

ஐயா!

எங்கள் நகரின் மைதானத்தில் உள்ள பலகாரக் கடை 'ராமகிருஷ்ணா லஞ்ச ஹோம்' என்னும் ஸ்தாபனத்தில் இன்னும் பார்ப்பனர்களுக்கென ஓர் தனியிடம் உணவருந்த ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான தமிழர்களால் பிழைத்து வரும் இம்மாதிரி ஹோட்டல் ஸ்தாபனத்தில் தனியிடமமைத்து பேதத்தைக் காட்டிவரும் இந்நிலை அரசாங்க சட்டமூலம் தடை செய்திருந்தும் இன்னும் இம்முறை ஒழிக்கப்படாமல் இருப்பதைக் காணும்போது சட்டம் அமுல் நடத்தும் போலீஸ்காரர் வெளிப்படையாகிறது.

இதுபோன்ற செய்கை பகிரங்கமாக நடந்து வருவதை இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனிப்பார்களா?

டி. எஸ். ஜகதீசன்,
திருப்பூர்.

தாய்மொழி படிப்பது தவறு?

ஐயா!

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழுக்கு அளிக்கும் இடம் சிறப்புடையதாய்த் தோன்றவில்லை. இண்டர்மீடியட் தேர்வுடன் மேல் படிப்புக்குச் செல்லும் மாணவர் முதல் வகுப்பில் தேறுவதன்றி ஐந்நூறு மதிப்பெண்கள் (marks) வாங்க வேண்டும். இதற்குத் தமிழ் மொழி ஒரு தடையாகவுள்ளது என்று உறுதியாகக் கூறுகிறது.

இந்தி, பிரெஞ்சு, வடமொழி போன்ற மொழிகளை எடுக்கும் மாணவர்கள் எண்பது எண்களுக்கு மேலாக வாங்குவார்கள். ஆனால் தமிழ் மாணவர்கள் எத்தனை சிறப்பாக எழுதினாலும் அறுபது எண்களுக்கு மேல் பெறுவதில்லை. பல்கலைக் கழகத்தார் அதற்கு மேல் அளிப்பதற்கு தமிழாசிரியர்களுக்கு உரிமை அளிக்கவில்லையா? இது நாங்கள் தாய்மொழி கற்பதற்கு அளிக்கப்படும் தண்டனையா அல்லது மதிப்பா என்பது புரியவில்லை. அந்நிய மொழிக்கு ஆதிக்கம் அளிக்கும் பல்கலைக் கழகத்தார் தமிழ் மாணவர்கள் முன்னேற வழி செய்வார்களா?

எம். தாயுமானவன்
பாபநாசம்
10—12—49

இந்தி அவசியமா?

ஐயா,

சென்ற இரண்டு மாதகாலமாக திருச்சி வானொலி நிலையத்தாரால் வணக்கம் என்ற சொல் கைவிடப்பட்டு வந்தே மாதரம், ஜேய் ஹிந்த் எனக் கூறப்பட்டு வருகிறது. தமிழகத்திலே இருக்கும் திருச்சி வானொலி நிலையத்தாரால் வணக்கம் என்ற வார்த்தை புறக்கணிக்கப்பட்டபோது தமிழர்கள் வருந்தினர். இதற்கு மேலும் ஓர் துயரத்தைத் தமிழர்களுக்குத் தந்துள்ளார் மந்திரி மாதவமேனன் அவர்கள். அதாவது டிசம்பர் மாதம் 19-ந் தேதி காலை 8-15 மணிக்கு இந்தி பாடம் என்கிற ஓர் நிகழ்ச்சியைத் திறந்து வைக்கப்போகிறார் சென்னை வானொலி நிலையத்தில். அந்த நிகழ்ச்சியை திருச்சி, விஜயவாடா நிலையத்தார் அஞ்சல் செய்ய வேண்டும் என்னும் உத்திரவு பிறப்பித்துள்ளார். இந்தி கட்டாய பாடமல்ல என்று சொல்லிவரும் ஆளவந்தார்களில் ஒருவரான மந்திரி மாதவமேனன் வானொலி மூலம் இந்திக்கு ஆதரவு தேடுவது ஏன்? வடநாட்டுக் கம்பெனி வேலையில் ஈடுபட்டு இருக்கும் மந்திரியார் மூன்று வேளைக்காக வேண்டி இதுவரை என்ன செய்தார்? இந்நாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக "முதியோர் கல்வி" நிகழ்ச்சி ஒன்றைத் திறந்து வைத்து, அந்நிகழ்ச்சியை ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டு வானொலியிலும் ஒலி பரப்ப வேண்டும்; முதியோர்கள் யாவரும் இந்நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தால் எவ்வளவோ பயன் உண்டே! தமிழகம் ஒதுக்கப்பட்டு இந்தி ஆதிக்கம் ஏற்படுத்தப்படுகிறது! இந்தக் கொடுமையை இனியேனும் விட மந்திரியாரும்-அப்படிச் சொல்ல மக்களும் முன்வருவார்களா?

கடம்பத்தூர் } கோ. தங்கவேலியப்
12-12-49 } பன்

இஸ்ரேலின் இரட்டை முயற்சி!

அம்மான், டிச. 16—

அமெரிக்காவில் 50,000 000 டாலர் கடன் எழுப்ப அனுமதி தரும்படி இஸ்ரேல் சர்க்கார் யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்காரை அனுமதி கேட்டிருக்கிறது. அநேகமாக அதற்கு அனுமதி கிடைத்து விடும்.

அதே சமயத்தில் யூதர்கள் நிதி உதவி அளிக்கும்படி ருஷ்யாவையும் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கும் யூத இடதுசாரி கட்சியினரை சாந்தப்படுத்தவும் இஸ்ரேல் தயாராக இருக்கிறது. இம்மாதிரி இரண்டு இடத்திலும் உதவி கோரி யுக்திசெய்வதால் நட்டிற்குப் பிரதாபத்து விளையும் என்று சில பத்திரிகைகள் எச்சரித்திருக்கின்றன.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

கல்வார்பட்டி

கல்வார்பட்டி, டிச 12—

11—12—49 மாலை 7-30 மணிக்கு இவ்வூர் அர்ச்சுனன் திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்துவக்கவிழா ஆரம்பமாயிற்று. தோழர்கள் இ. கோவிந்தன், ம. பெருமாள் ஆகியோர், இயக்கப் பாடல்கள் பாடினார்கள். தோழர் வேங்கடாசலம் முன்மொழிய, தோழர் இராகவன் வழிமொழிய, தோழர் காளியப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தலைவர் முகவுரைக்குப்பின் திண்டுக்கல், தோழர் க. அங்குச்சாமி அவர்கள் கூட்டத்தின் நோக்கம் பற்றி பேசினார். அடுத்து பேசிய திருச்சி தேசியக்கல்லூரி மாணவர் தோழர்கள் வீ. அரங்கராசு, இரா லிங்கம் ஆகியோர் இன்றைய நாட்டின் நடப்பு பற்றியும், மதம் ஒழிய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கமாக பேசினார்கள்.

அடுத்து பேசிய திண்டுக்கல், தோழர் எம் பரமசிவம் அவர்கள், இன்றைய பழங்குடி மக்களின் நிலை பற்றியும், மூடப்பழக்க வழக்கங்கள் பற்றியும், ஆட்சியாளரின் அவநிலை பற்றியும் நகைச்சுவைததும்ப நீண்ட சொற்பொழிவாற்றினார்.

அடுத்து பேசிய, திண்டுக்கல் தி. மு. க. செயலாளர்— என். முத்து அவர்கள், மஞ்சள் பெட்டியில் ஓட்டு போட்டதால் இன்று மக்கள் படும் அவதியைப் பற்றியும், ஆட்சியாளரின் அடக்குமுறை பாணங்கள் பற்றியும், திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

கூட்டம் இரவு 9-30 மணிக்கு துணைசெயலாளர் என். கஸ்தூரி அவர்கள் நன்றி கூறலுடன் இனிது முடிந்தது. (வி-உ)

சக்கரமல்லூர்

சக்கரமல்லூர், டிச. 12—

(10—12—49) சக்கரமல்லூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவிற்கு சி. பி. சுந்தரேசுவரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆற்காடு தி. மு. க தோழர்கள் த. பொன்னம்பலம், கோவிந்தராஜு, நாராயணசாமி, தம்பிதுரை, முனுசாமி, முனிக்கண்ணு, நடராசன் ஆகியோர் சென்று சிறப்பாக கூட்டத்தை நடத்தி தந்தார்கள்.

இரவு 8-30 மணி அளவில் கோவிந்தராஜு தலைமையில் கூட்டம் துவக்கப் பெற்றது.

நாட்டுப்பண்: ஆற்காடு தோழர் தம்பிதுரை பாடினார். ஆற்காடு தோழர் வி. ஏ. முனுசாமி ராமாயணத்தில் உள்ள உண்மை பொய்களை எடுத்துப் பேசினார். பின் தோழர் நடராசன் கொடி யேற்றினார். முதியோர் கல்வியும், மதம் இல்லை யேற்றினார் முதியோர் கல்வியும், கோயிலில் உள்ள பணத்தைக்கொண்டு சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி மாணவர்களை முன்னேற்றமடையவும், அரசியல் விஷயத்தையும் நன்கு எடுத்துப் பேசினார்.

அடுத்தபடியாக தோழர் காட்பாடி வே. மு. ரத்தினம் ஆட்சியாளரின் குறைகளையும், ஆதாரக் கல்வியைப்பற்றியும், பள்ளி ஆசிரியரின் கஷ்டத்தையும், மரமேறி தொழிலாளிகளின் துயரத்தையும், மக்களிடம் வரிப் பணத்தைப் பெற்று வீண் ஆடம்பரம் செய்வதையும், விவசாயிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தின் கதியையும், மந்திரிகளையும், விற்பனை வரி விவசாய மந்திரி, நேரு அமெரிக்க விஜயம், பள்ளி சிறுவர்களுக்கு ஆடையைப் புகுத்துவதையும், மங்சவுந்த தொழிலாளிகளின் நிலை, முதலியவற்றை எடுத்துக் காட்டினார்.

காவேரிபாக்கம் கணேசன்: புராணங்களின் ஊழல்களை எடுத்துப் பேசினார்.

நன்றி உரை :-கச்சியப்பர் :- அறிவேயான கடவுள், கடவுள் அறிவு என்று, பழங்கால புராண முறைகளை எடுத்துக் காட்டினார்.

கூட்டம் முடிவு இரவு 10-30 மணி.

மாகாணத்தில் தானியக்கொள்முதல்

கலெக்டர்களுக்கு சுற்றறிக்கை

சென்னை, டிச. 13—

நிலச்சுவான்தார்களிடமிருந்து தானியக் கொள்முதல் செய்யும்பொழுது, நிலங்களில் வேலை செய்யும் பண்ணைத் தொழிலாளர்களுக்காக ஒதுக்க வேண்டிய தானிய அளவு முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு சென்னை சர்க்கார் மாகாணத்திலுள்ள எல்லா கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இரண்டு பண்ணைத் தொழிலாளர்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனராம்: பண்ணைகளில் நிரந்தரமாக வேலை செய்து நிலச்சுவான்தார்களினால் பாதுகாக்கப்படுகின்றவர்கள்; நிரந்தரமாக வேலை செய்து ஒருவேளை உணவு பெறுபவர்கள்; நிரந்தரமாக வேலைசெய்து கூலியைப் பொருளாகப் பெறுபவர்கள்; விதைப்பது, சாத்துவது, அறுவடை செய்வது போன்ற காலங்களில் மட்டும் வேலை செய்து கூலி பெறுபவர்கள், முதலாவதாகப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ரேஷன், நிலச்சுவான்தார்களுடைய ரேஷனுடனேயே ஒரு துண்டு காலத்திற்குச் சேர்க்கப்படவேண்டும்.

இரண்டாவது மூன்றாவது பண்ணைத் தொழிலாளர்களுக்கு சாப்பாடு, கூலி ஆகியவை நிலச்சுவான்தார்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும் அளவிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

நான்காவதாகத்தினருக்குஆகும் செலவு விவசாய செலவினங்களில் சேர்க்கப்படவேண்டும்.

இவைகளுக்கான தானியம்ஒதுக்கிய கொள்முதல் செய்யவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

17–12–49

காவேரிப்பாக்கம் :—	இரா. நெடுஞ்செழியன், வி. முனுசாமி.
களம்பூர் :—	புலவர் கோவிந்தன் பி. ஓ. எல்.

18–12–49

பவானி :—	ஈ. வி. கே. சம்பத், கே. ஆர். ராமசாமி.
சிவகங்கை :—	டி. சே. சீனிவாசன்.

வற்புறுத்திப் பயனில்லை; சூழ்நிலையைச் சரிப்படுத்துங்கள்

கட்டுப்பாடுகள் நீங்க ஓமந்தூரார் காட்டும் வழி

—(0)—

அரிசி வர்த்தகர் சங்க விழாவில் ஓமந்தூரார் பேச்சு

கட்டுப்பாடுகளால் ஊழல்கள் வளர்ந்து கொண்டு போவது உண்மை; அது கட்டுப்பாடுகளை நீக்கி விட வேண்டும் என்று வற்புறுத்தும் வியாபாரிகள் கட்டுப்பாடுகள் எடுபடத்தக்க சூழ்நிலையை உண்டுபண்ண வேண்டும். இதை விட்டு விட்டு உடனடியாகக் கட்டுப்பாடுகளை யெல்லாம் நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டேயிருப்பதில் பயனில்லை.

என்று அண்மையில் சென்னையில் நடைபெற்ற அரிசி வியாபாரிகள் சங்க ஆறுவது ஆண்டு விழாக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசிய தோழர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்.

கட்டுப்பாடுகள் நீங்க வேண்டும் என்ற கருத்தை மறுப்பார் [illegible] யாருமே கிடையாது. அதிலும் கடந்த சில நாட்களாக இந்தக் கருத்து சற்று அதிகரித்திருக்கிறது. கட்டுப்பாடுகளால் நாட்டுக்குள்ளே தோன்றுகின்ற தீங்கு விளைந்து விட்டது [illegible] வும், அவற்றை நீக்கினால் சகல இன்னல்களும் நீங்கி விடுவது போலவும் பேசுகின்றனர். பாவம்! இவர்களுக்கு நாட்டு நலத்தில் அவ்வளவு அக்கறை! இவ்வளவு கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்பதற்கு அவர்கள் கூறும் காரணங்களில், கட்டுப்பாடுகளிருப்பதால் ஊழல்கள் மலிந்து விடுகிறது என்பது முக்கியமானதாகும்.

ஆம், கட்டுப்பாடுகளினால் ஊழல்கள் வளர்கிறது என்பதும் ஓரளவிற்கு உண்மைதான். ஆனால் இதற்காக கட்டுப்பாட்டு முறையே கூடாது என்பதில் என்ன பொருள் இருக்கிறது? ஊழல்கள் எந்த அளவிற்கு [illegible] நிலையை [illegible]. இந்நாட்டு ஆட்சிமுறையின் அடிப்படை [illegible] ஊழல்கள் இருக்கின்றன [illegible] என்பதற்காக ஆட்சிமுறையையே அடியோடு அகற்றிவிட முடியுமா? ஊழல்களைக் கண்டுபிடித்து அவைகளை அகற்றுவதைத்தான் செய்யவேண்டும். ஊழல் அற்ற முறையை வகுக்க வேண்டும். அதுதான் செய்யக் கூடியது. அதை விட்டு அடியோடு பலவற்றையும் தகர்ப்பது என்பது அறிவுடைமையாகாது.

கட்டுப்பாடுகளை நீக்க இவ்வளவு தூரம் சஷ்டாங்கம் போடும் வியாபாரிகளிடம் மட்டும் ஊழல்கள் இல்லாதிருக்கிறதா? கட்டுப்பாடுகள் ஏற்படுவதற்கு முன் மக்கள் [illegible] கிடைக்கவில்லையென கஷ்டப்பட்டுத் தவித்தனரே, அது ஏன்? அதற்குக் காரணம் யார்? வியாபாரிகள் கொள்ளை லாபத்தில் நாட்டம் வைத்து பொருள்களைப் பதுக்கியதால் வந்த விளைவல்லவா அது?

பின்னர் கட்டுப்பாடு ஏற்பட்ட பின் ஏதோ ஓரளவுக்கேனும் பண்டங்கள் மக்களுக்குக் கிடைக்க ஆரம்பித்தது, அது ஏன்? என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கின்றபோது தான் கட்டுப்பாட்டினால் விளையும் நன்மைகள் தெரியவரும்.

இப்படிச் சொன்னால் கட்டுப்பாடுகள் என்றும் இருந்தே தீர வேண்டுமென்று நாம் கருதுவதாகக் கொள்ளக்கூடாது. எந்த நேரத்தில் வியாபாரிகளிடமிருந்து சுயலாபம் அகலுகிறதோ அந்த நிமிடமே கட்டுப்பாட்டை உதறித் தள்ளிவிடலாம். கட்டுப்பாடுகள் நீக்க வேண்டுமானால் கட்டுப்பாடுகள் ஏற்பட எவை எவை காரணமாக இருந்தன [illegible] அவை அனைத்தும் அடியோடு ஒழிய வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டுபண்ண வேண்டிய மகத்தான பொறுப்பு வியாபாரிகளிடமே இருக்கிறது. இதைத்தான் ஓமந்தூரார் வெகு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். ஓமந்தூராரை வியாபாரிகள் விருந்தினராக அழைத்தார்கள். விருந்தினராக வந்த அவர் வியாபாரிகளுக்கு இத்தகைய ஒரு நல்லுபதேசம் என்னும் மருந்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். அம்மருந்து தான் நாம் மேலே எடுத்துக் காட்டியிருக்கும் வாசகங்கள். அம்மருந்து சற்று கசப்பானதாயிருப்பினும் பயனுள்ள மருந்து என்பதை வியாபாரிகளுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இனி நடப்பவை

காவேரிப்பாக்கம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா, 17—12—49 சனி மாலை 5-30 மணிக்கு, இவ்வூர் மரியம்மன் கோவிலுக்கருகில் நடைபெறும். சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர் தோழர் வி. முனுசாமி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்கள். தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை:— சென்னை சேப்பாக்கம், அருணாசல முதலித் தெரு, 13 எண்ணுள்ள மாடியில் 18—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்கள். அதுபோது சேப்பாக்கத்தில் தி. மு. க. கிளையொன்று அமைப்பதுபற்றி ஆலோசிக்கப்படும். கழகத்தில் இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்களும், சேர விரும்புகிறவர்களும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

காட்பாடி:— இவ்வூர் பாரதிக் கழகத்தின் சார்பில் 17, 18-12-49 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பாரதியார் விழா கொண்டாடப்படும். விழாவிற்கு தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் தலைமைவகிப்பார்கள். கவிஞர் அ.கு. ஆதித்தர், வித்வான் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தோழியர் சத்தியவாணிமுத்து, தோழியர் சாரா ஹாரிஹான் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை— 16-12-49 வெள்ளி மாலை 6-மணிக்கு, பெரிய கடை வீதி, "காமாட்சி விலாஸ் காபி கிளப்"புக்கு எதிரிலுள்ள கட்டிடத்தில் தென் கோவை தி. மு. க. கிளை அமைப்புக் கூட்டம் நடைபெறும். இயக்கத் தோழர்களைவரும் வந்து கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சிவகங்கை—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம் 18—12—49 மாலை 6-மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர் டி. சே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

* * *

களம்பூர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 17—12—49 சனி மாலை 6-மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது திருவத்திபுரம், புலவர் கோவிந்தனார் பி. ஓ. எல். அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

கோவை மாவட்ட தி. மு. கழகம்

செயற்குழு உறுப்பினர்கள், கிளைக் கழகங்களுக்கு அறிவிப்பு

18—12—49 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோவையில் நடைபெறும் மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்திற்கு வரும் தோழர்கள், தங்கள் வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சீட்டின் அடிக்கட்டைகளையும் (மாவட்ட, மத்திய கழக) அதற்குரிய சந்தா தொகைகளையும் கொண்டுவந்து சேர்ப்பிக்கவும்.

இதுவரை கிளைக்கழகங்களின் செயற்குழு உறுப்பினர்கள் விபரமடங்கிய கடிதங்களை அனுப்பாத கழகங்களும் உடனடியாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எஸ். ஏ. ராஜமாணிக்கம், துணைச் செயலாளர், தி. மு. க. கோவை மாவட்ட கிளை.

போகிற போக்கில்...!

"பாரிஸ்டர் பாலசனின் உடல் சிர்ப்பட்டு, நீதிமன்றத்துக்குப் போய் வருகிறார். பலக் குறைவு ஏற்பட்டிருக்கிறது."

—பத்திரிகைச் செய்தி

எதிர்கட்சி வக்கீல் இவரை விட கெட்டிக்காரராயிருந்திருப்பார்; நல்ல சாட்சிகளாக நான்கைந்து பேரைப்போட்டு பலக்குறைவை சரிப்படுத்தலாம்.

* * *

"நமது கவர்னர் ஓர் அற்புத வில்லாளி: குறி தவறாமல் இருமுறை அம்பு எய்தார்."

—செய்தித் தலைப்பு

அப்படியா! துர்அதிர்ஷ்டவசமாக சீன கம்யூனிஸ்டுகள் இந்தியாவில்தலை நீட்டுவாரேல் கொரில்லாப் போர் நடத்தப் பயன் படுத்திக்கொள்ளலாம் பவானகரை!

* * *

'இந்திய அரசியல் திட்டம் சரித்திரத்தில் மகத்தான சம்பவம்.'

— சி. ஆர். ரெட்டி

ஆனால் மக்கள் மன்றத்தில் மட்டரகப் பித்தலாட்டக்காரனே என்கிறார் ஒரு தீவிரவாதி!

* * *

ஜாதி சமூக துவேஷமற்ற பலம் பொருந்திய ஹிந்து சமூகத்தை சிருஷ்டிப்பதே நமது இலட்சியம்."

—மந்திரி சந்தானம்

நான்கு கால்களற்ற பலமிக்க நாற்காலியொன்று செய்யப்போகிறேனென்று சொல்வதைப் போலிருக்கிறதே!

* * *

'ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா மீது காரசாரமான விவாதம்'

— செய்தித் தலைப்பு

அதுக்கு ஒரு 'டம்ளர்' ஐஸ் வாட்டர் கொடுத்து நிலைமையை ஓரளவு சமாளித்திருக்கலாம்!

* * *

"விபாகத் அலியின் ரஷ்ய விஜயம் கோவிந்தா?

—செய்தித் தலைப்பு

அமெரிக்க விஜயமும் 'அரோகரா' ஆனால் இரட்டிப்பு சந்தோஷமடையலாமல்லவா!

* * *

'என்ன இருந்தாலும், நாம் இந்துக்கள் தானே'!

—அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்

ஐயோ, யார் சாமிகாள், இல்லை யென்றது? காந்தியாருக்கு சமாதி கட்டித்தான் இதை ஆணித்தரமாய் நிரூபித்து விட்டோமே!

குடியேற்றம் தி. மு. கழகத்தில் போலீஸ் சோதனை

ஆட்சியாளரின் கெடுபிடி தர்பார்!

குடியேற்றம், டிச 8—

3—12—49 சனிக்கிழமை காலை சமார் 9-மணிக்கு குடியேற்றம் சந்தைப் பேட்டை திராவிட முன்னேற்றக் கழகக் கட்டடத்தை இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர்; நாகர ஐ மற்றும் மூன்று போலீஸ் கான்ஸ்டேபிள்களும் அப்பாக்குடன் வந்து கழகத்தைச் சோதனையிட்டனர்.

எதற்காக சோதிக்கிறீர்கள் என்று வினவியதற்கு, பறிமுதல் செய்த இயக்கப் புத்தகங்கள் ஏதாவது இருந்தால் அதைக் கைப்பற்றச் சொல்லி மேலிடத்திலிருந்து உத்திரவு வந்ததாக உரைத்தார். நீண்டநேர சோதனைக்குப் பின் பறிமுதலான புத்தகம் இல்லை என்று [illegible] தவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு திரும்பினர்.

இவர்களின் செயலைப் [illegible] பொது மக்களுக்கு ஒரு வித பரபரப்பை [illegible] பண்ணியுள்ளது.

நீதி-நிர்வாக இலாகப் பிரிவினை

அனந்தபூர், வெல்லாரி, சித்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நீதி நிர்வாக இலாகாப் பிரிவினைத்திட்டத்தை 1950 ஜனவரி 1-ம் தேதி முதல் அமுலுக்குக் கொணருமாறு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்து விட்டனர்.

ஓர் உயிரை காப்பாற்ற அரைமணியில் விமானநிலையம் சிருஷ்டி

லண்டன், டிச. 14—

மிகவும் ஆபத்தான நிலைமையில் இருந்த ஒருவர் உயிரைக் காப்பாற்றும்படி நியூஸவுத்வெல்ஸிலுள்ள நாலவர் 300 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு டாக்டருக்கு ரேடியோ மூலம் செய்தி அனுப்பினர். தான் விமானத்தில் வருவதாகவும் ஆனால் அங்கு இறங்க வசதியில்லையென்று டாக்டர் தெரிவித்ததாகவும் உடனே [illegible] ஊரிலுள்ளவர்களும் [illegible] அரைமணி நேரத்தில் விமானம் இறங்க வசதிசெய்து டாக்டர் [illegible] ஒரு உயிர் காப்பாற்றப்பட்டது.

—ரூடர்

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் இந்தியர் போட்டி இடுவார்

லண்டன், டிச. 15—

வரப்போகும் பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில், மேற்கு வில்லஸ்டென் தொகுதியில் லிபரல் அபேட்சகராக, கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த சர்தார் அகலிவாலியா போட்டியிடுவார் என்று தெரிகிறது.

பழமைக்குப் பல்லாண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தத்தில் நாட்டமுற் கல்லெண்ண மூழுமையுடைய பொறுப்புள்ளோர் பற்பலரும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். நேரு சர்க்காரின் திறம் எந்த அளவிலிருக்கிறதென்பதைப் பொறுத்துப் பார்ப்போம் என்று எதிர்பார்த்திருந்தோம் இந்த ஒரு கிழமையாக வைதிகபுரியின் சுற்றுச் சுவர் அரண்களாக, பழமையின் பாதுகாவலாக, புராதன சம்பிரதாயங்களின் பாலலராக இந்து மதத்தின் விழிப்புள்ள காவற்காரர்களாக, சீர்திருத்தத்திட்டத்தைக் ... றர்களாக சேற்று சட்டசபையில காட்சியளித்தனர் அல்லாடியும் பட்டாபியும்!

மசோதாவை ஆதரித்தும், எதிர்த்தும் அல்லாடியாரும் பட்டாபியாரும் பகட்டாகவும், பசதாம் பசலிப் போக்கிலும் பேசியிருப்பது பொறுப்புள்ளவர்க்கு மனவேதனையையும், மருட்சியையும் ஊட்டக் கூடியதாகவே யுள்ளது. ஒன்றுந் தெரியாத உன்மத்தர்களல்லர் இருவரும்; சீர்திருத்தத்தின் அவசியத்தை, அதுவும் 'இந்து சதாய' சீர்திருத்த இன்றியமையாமையை உணராதவர்கள் என்றும் கூறிவிட முடியாது. அப்படியிருந்தும், 'சட்டைகட்டும்' சொகுசு வார்த்தைகளும், கோணல் குதர்க்கங்களும் அடுக்கிக்கொண்டு போகிறார்களென்றால், அவர்களது நல்லெண்ணத்திலும் நேர்மையிலும், மனப்போக்கிலும், பொறுப்புணர்ச்சியிலும் சந்தேகப்படவேண்டிய கட்டாயத்திலேயே நாமிருக்கிறோமென்பதையாரே மறுக்க முடியும்!

பழமைக்குமுட்டுக்கொடுக் கொடுக்கும் தனது பணே பாவத்தை 'பாலிஷ்' போட்ட தன்மையில் வெளிப்படுத்த நினைக்கும் பட்டாபி சீதாராமய்யா, ஜனநாயக் கோட்பாடுகள் கொழுந்துவிட்டு எரியப்பேசியுள்ளார்! நாட்டு மக்களை, வாக்காளரை கல்வியறிவிற் சிறந்தோராக்கி, பின்னர் அவர்களது சம்மதத்தோடு நிறைவேற்றப்பட வேண்டியதாகும் இம்மசோதாவென சரமாரியாக 'ஜனநாயகபாஷ்யம்' பாடியுள்ளார், பட்டாபியார். நாடாளவந்த 'நல்லவர்கள்' செய்ய பற்பல சட்டங்களுக்கும் 'ஜனநாயக ஜோதி'யை விரும்பாத-வேண்டாத- வலியுறுத்தாத பட்டாபியார், இம்மசோதாவுக்கு மட்டும் நல்லறிவு கொண்டநாட்டு மக்களின் சம்மதத்தைப் பெற வேண்டுமெனக் கோருவதின் அந்தரங்கமென்னவென்று கேட்கிறோம். அப்படித்தான் நாட்டு மக்களின் நல்லாதரவு இம்மசோதாவுக்கு இப்போதில்லையென்பதை எந்த 'தர்மாமீட்டர்' வைத்துஅளந்துபார்த்தார் காங்கிரஸ் தலைவர் என்று கேட்கிறோம். இன்றைய மக்கள் சமுதாயத்துக்கு ஏற்றதொரு மசோதா இது என்பதை எந்த வகையிலும் காரண காரியங்களோடு மறுக்க இயலாத பட்டாபியார், இதுபோன்ற அர்த்தமற்ற வாதத்திலீடுபட்டு, சீர்திருத்தத்துக்கு முட்டுக்கட்டைப் போடுவது நேர்மையும் முறையுமாகுமா வென கேட்கிறோம். 'இந்த மசோதாவை நிறைவேற்றி விட்டால் தேர்தலில் படுதோல்வியடைவீர்கள்' என்று காங்கிரஸ்காரர்களின் 'மெல்லிய உணர்ச்சிகளைத் தட்டி எச்சரித்துள்ளார் காங்கிரஸ் தலைவர். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பொறுத்தவரையில் டாக்டர் அம்பேத்கார் வகுத்துத் தயிருக்கும் இம்மசோதாவைப் பொறுத்தவரையில், இந்நாட்டுப் பெருவாரி மக்களுக்கு ஒவ்வாத, உதவாத, மாறுன, பாதகமான ஷரத்து என்ன இருக்கிறதென்பதைக் கூற முடியுமா? இந்த சட்டத் தொகுப்பின் எந்த ஷரத்து காரணமாக பொது மக்கள் ஆத்திரங்கொண்டவராய், அடித்து வீழ்த்திவிடப் போகிறார்கள் காங்கிரஸை? எந்த நாகரிக மனப்போக்குடைய யோரும் ஏற்றுக் கொள்ள முடியாத அடக்கு முறை நடவடிக்கைகளிலும முதலாளித்வ முன்னணியிலும் ஈடுபட்டுள்ள இவர்கள் பொதுத் தேர்தல்களில் பொது மக்களை சந்திக்கக் கிஞ்சித்தும் கூச்சமில்லாமல் முற்பட்டிருக்கும்போது, அறிவுடைமைச் சட்ட சமுதாய நன்மைக்குத்தான் இம்மசோதாவை நிறைவேற்றுவது மூலமாகத் தானா வீழ்ச்சி வந்துவிடப் போகிறதெனக் கேட்கிறோம். இது மக்கள் சம்மதம் இல்லாத மசோதா என்கிற வாதத்துக்காக, வைத்துக் கொள்வோம். ...துவிலக்கு நுழைவு போன்ற சட்டங்கள் கொண்டுவந்தனரே அவற்றுக்கு எத்தனை சதவிகித மக்களின் ஒருமித்த ஆதரவு இருந்ததெனக் கேட்க ஆசைப்படுகிறோம். நாட்டு மக்களுக்கு நல்லவையென கண்டவற்றைச் செய்வது தானே பொறுப்புள்ள சர்க்காரின், மக்கள் பிரதிநிதிகளின், படித்தறிந்தோரின் கடமையாகும் மக்களின் மௌடிகத்திலும் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் காலந்தள்ள விரும்புமோ சர்க்கார் எத்தனை நாளைக்கு நீடிக்க முடியும்? சரித்திரக் கல்வியுணர்வுடைய பட்டாபியாருக்கு இது விளங்காமற் போனதேனோ? இந்த சட்டத் தொகுப்பு மசோதாவை சட்டமாக்கின பொது மக்கள் செல்வாக்கை இழக்க நேரும் காங்கிரஸ் என்று கூறும் பட்டாபியை ஒன்று கேட்க ஆசைப்படுகிறோம்; சமுதாய சீர்திருத்தத்துக்கான ஒரு சட்டத்தை நாட்டவருக்கு நன்மையளிக்கக் கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது மூலம் தேர்தலில் தோற்றுத்தானாக வேண்டுமே காங்கிரஸ்! நல்ல காரியமென்று எதாரக் கருதுவதை(!) நிறைவேற்றுவதன் மூலம் பெறிடும் விளைவுகளைத் தாங்க இயலாத ஸ்தாபனம் நன்மையை நாடும் ஸ்தாபனம் என்பது எப்படி பொருந்தும்? சமுதாயத்தை சீர்திருத்துவதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் மக்கள் எதிர்ப்பு எங்கு வந்துவிடுமோ என அஞ்சும் சர்க்கார், தேர்தலில் தோல்வி வந்துறுமோவென அஞ்சும் சர்க்கார்கட்கு, வேறு எந்த நல்ல காரியத்தைச்செய்யமுடியும் வெறும் பேறு, ஆட்சிப் பீடமேறக் கனவு காண்கிறதெனக் கேட்கிறோம். பட்டாபியாரின பொருளற்ற பகட்டுரைகள் எல்லாவகையிலும் பொறுப்புணர்ச்சியுடையோரால் எள்ளிநகையாடி புறக்கணிக்கப்படவேண்டியனவேயாகுமென்பதை எடுத்துக் காட்டி, இதுவே விரிந்துவிட்ட காரணத்தால் அல்லாடியார் கூற்று பற்றிய மறுகருத்துரை நாளை வெளிப்பட பெறுமெனக் கூறி இதனை முடித்துக்கொள்ளுகிறோம்.

திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

1—1—1950 ஞாயிறு காலை நடைபெறும்

(1) வெளியூர் கிளைக் கழக பிரதிநிதிகள் 25-2-49க்குள் மாநாட்டுப் பணி கழகக் கட்டணத் தொகையுடன் தெரிவிக்கவும்.

(2) வரவேற்புக் குழுவினர்களின் கட்டணத்தொகையை 24—12—49 க்குள் அவசியம் அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் அன்பன்'
ஜி பராங்குசம்,
செயலாளர்.

டிராம் கட்டணத்தை மேலும் உயர்த்தாதே!

நகரசபைத் தீர்மானம்

சென்னை, டிச. 14—

நகரசபையின் சாதாரண கூட்டம் நேற்று நடைபெற்று பல விஷயங்கள் ஆமோதிக்கப்பட்டன. பிறகு, சென்னை டிராம்வே கம்பெனியார், டிராம் கட்டணத்தைஉயர்த்த வேண்டும் என அரசாங்கத்திற்கு மனு சப்பு கொண்டிருப்பதை யொட்டி, 'கட்டணம் உயர்வுக்கு அரசாங்கம் அனுமிதிஅளிக்ககூடாதென்றும கம்பெனியாரின்செய்கையைக் கண்டிப்பதாகவும்'' தோழர் க இராமதாஸ் தீர்மானமொன்றுகொண்டுவரத்தோழர் எ ஆர் வி. ஆச்சாரால ஆமோதிக்கப்பட்டது.தோழர்கள். வி. முனுசாமி, டி. எம. ராமசமி, நமசிவாயபாரதி, என. ஜீவரத்தினம ஆகியோர கட்டணவுயர்வைக் கண்டித்துப் பேசினர். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதில் ஒரே ஆங்கிலேயர் எதிர்க்க, பெரும்பான்மை ஓட்டுகள் பெற்று நிறைவேறியது.

சென்னை சட்ட சபை டிச. 16-ம் தேதி கூடும்

சென்னை, டிச. 14—

சென்னை சட்ட சபை டிசம்பர் 16-ம் தேதி காலை 11 மணிக்கு கூடும். இப்போதுள்ள திட்டப்படி இந்த செஷன் டிசம்பர் மாதம் 2-ம் தேதி வரை நடைபெறும். மீண்டும் 1950 ஜனவரியில் தான், சட்ட சபை கூடுமெனத் தெரிய வருகிறது.

திருத்தம்

சென்னை 6-12-49 வெளியூர் 7-12-49 "மாலை மணி"யில் 6-வது பக்கத்தில் வெளி வந்துள்ள 'மணமகள் தேவை'' என்ற விளம்பரத்தில்கொடுக்கப்பட்ட விலாசமுகவரியை சேர c/o சாது ஆறுமுகனேரி திருநெல்வேலி ஜில்லா என திருத்திப் படிக்கவும்.

வானொலி

(16-12-49 வெள்ளிக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 கமலா—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-30 பி ஆர். மணி சாக்ஸபோன்

பிற்பகல்:

12-30 கிராமப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 குழலோசை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 ஜி. வி. ரங்கநாயகம்மா பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 தாமோதராச்சார்யுலு — பாட்டு

இரவு:

7-00 எம். வெங்கடராமன்-பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 குழலோசை (இசைத்தட்டு)
8-00 கிராமவாசம் தொடர்ச் சித்திரம்
8-15 நாராயண ஐயங்கார்-வீணை
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 பல்கலைக் கழகங்களுக்கு (ஆங்கிலம்)
9-30 நேயர் விருப்பம் (இ. த.)
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எ. என். சிடி. அண்ணாமலை—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 திருச்சி வாத்ய கோஷ்டி
8-30 கலியாணசுந்தரம்-பாட்டு

பிற்பகல்:

12-30 கிராமப்பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எ. என். சிடி அண்ணாமலை பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 வி. துரைசாமி ஐயங்கார்—வீணை
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 பி. எல். ஜி. எம். சிவசுப்ரமணியம் சகோதரர்கள்—நாகஸ்வரம்
5-40 எச். எஸ். மத்வாச்சார்—கோட்டுவாத்யம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சஞ்சீவனம் (இசைத்தட்டு)
7-45 நமது தபால் பெட்டி
8-00 பி. எல். ஜி. எம். சிவசுப்ரமணியம் சகோதரர்கள் நாகஸ்வரம்
8-30 கல்யாணராமன்-பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சென்னையில் உள்ளபடி
9-35 வீர மைந்தன் இசை நாடகம் முடிவு.
10-00

குருட்டுவாதத்தை ஒழித்து, பார்ப்பனீயத்தைப் புதைத்து, சுரண்டல் கூட்டத்தை ஒடுக்கி, பாட்டாளிகளை வாழ்விக்க மதுரையிலிருந்து...

சங்குநாதம்

திராவிட முன்னேற்றவார இதழ்
ஆசிரியர் குழு—
பி. சுவாமிநாதன், மதுரைமன்னன், ஏ. சீ. கலியபெருமாள்

1—1—50 முதல்
ஞாயிறு தோறும் வெளிவரும்

தனிப் பிரதி .... 0—1—6
ஆண்டு சந்தா .... 4—8—0

எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக்கூடிய தீவிர நோக்கமுள்ள விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:— நிர்வாகி,
'சங்குநாதம்' அலுவலகம்,
166, வடக்குமாசி வீதி, மதுரை.

மொகாஞ்சதாரோவுக்கு விமான நிலையம்

பாகிஸ்தான் சர்க்கார் ஏற்பாடு

சிந்து மாகாணத்தைச் சேர்ந்த மொகஞ்சதாரோவுக்கு (ஹரப்பா நாகரிகச் சின்னங்கள் கண்டெடுக்கப் பொருள்களாக கண்ட இடம்) உலகின் பல பகுதிகளிலிருந்தும் பிரயாணிகள் வந்து பார்த்துப் போக, வசதி ஏற்படுத்தித்தரும் வகையில் பாகிஸ்தான் மாகாண சர்க்கார் அங்கொரு விமான நிலையத்தை நிறுவ திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. விமான நிலையம் கட்டி முடிந்ததும், தங்கும் விடுதிகளும், இதர வசதிகளும் அடுத்தடுத்து ஏற்பாடு செய்யப்படுமென பாகிஸ்தான் செய்தி நிலையம் மேலும் கூறுகிறது.

பங்களூரில் 'போலிஅரிசி' தயாரிப்பு

கோதுமை, சோளம் இவை இரண்டும் கலந்த 'போலி அரிசி' பங்களூர் உணவு ஆராய்ச்சி ஸ்தாபனத்தால் ஆராய்ச்சிசெய்யப்பட்டு வருகிறது என்றும், அரிசி போலவே இது இருக்கிறதென்றும், சுலபமாக ஜீரணமாகிறதென்றும் இது கலைதென்று முடிவு செய்யப்பட்டால் அரிசிக்கு பதில் இதை உபயோகிக்கும் எனவும், இலங்கை உணவு மந்திரி ரத்னாயகா கூறினார்.

—குளாம்

நகர சபைத் தேர்தல்

மறுப்பு விண்ணப்பம் தள்ளுபடி

சென்னை, டிச. 13—

சென்னை பெரிய மேட்டுப் பகுதியில் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற டாக்டர் எ. கிருஷ்ணசாமியின் தேர்தலை எதிர்த்து, பெரியமேடு தேர்தலில் தோல்வி யுற்ற டாக்டர் வி. கட்சன் என்பவர் விடுத்திருந்த மறுப்பு விண்ணப்பத்தை, சென்னை சிறு வழக்கு மன்ற நீதிபதி தள்ளுபடி செய்தார். அத்துடன் விண்ணப்பதார், டாக்டர் எ. கிருஷ்ணசாமிக்கும், நகர சபைக்கும் முறையே 100 செலவுத் தொகையாகக் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Kesavaville Press, 2/45, Muthial Chetty Street, Madras-1.